| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **1181/2008 C/w. OS. No. 1139/2008** |
| தேதி | : | **06.02.2026.** |
| பெயர் | : | **நாகலிங்கம் த/பெ சின்னையன்.** |

**வா.த.சா.1 (PW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**
**வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) தாவாசொத்தின் புல எண் 9/1A ஆகும். மேற்சொன்ன புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 74 செண்ட் ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 74 சென்டை எனது தந்தை 1974 ம் ஆண்டு மோகனசுந்தரம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். வாதாசாஆ 2 எனது தந்தையானவர் மேற்சொன்ன தாவா சொத்தில் 60 செண்ட்டை இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரப்பத்திரம் வழங்கினார் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி அந்த பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் மூகாம்பிகை நகர் என்ற லேஅவுட் உருவாக்கப்பட்டு அதை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

2) மேற்சொன்ன 74 செண்ட்டில் நான்கு எல்லைகளில் கிழக்கு பக்கமாக இருக்கும் 60 செண்ட் நிலத்தை தான் விற்பனை செய்தார என்றால் சரிதான். வாதசாஆ 2 எனது தந்தையால் 1 ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகாரப்பத்திரம் ரத்து செய்யப்படமுடியாது என்ற நிபந்தனையுடன் உள்ள பத்திரம் என்றால் சரிதான். எனது அப்பா 17.01.2001 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தந்தையின் வாரிசு தாரர்கள் நானும், எனது தாயாரும் ஆவார்கள். வாதசாஆ 4 தாக்கல் செய்த எனது தந்தை மற்றும் தாயரின் வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். அதில் எனது தாயாரின் இறப்பு சான்றிதழில் என்னை மட்டும் தான் எனது தந்தைக்கு வாரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) எனது தாயாரின் பெயர் பாளையம்மாள் ஆகும். எனது தாயார் 2012 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தந்தையாரின் வாரிசு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24.03.2003 ம் தேதி எனது தாயார் வாதசாஆ 5 எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். அதில் தாவா சொத்தில் ஏற்கனவே விற்பனை செய்த 60 சென்ட் நிலத்துடன் சேர்த்து மொத்த விஸ்தீரணம் 74 சென்டிற்கும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கை நான் மொத்த விஸ்தீரணம் 74 சென்டிற்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2 ம் பிரதிவாதி

அசல் வழக்கு எண் 1139/2008 என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நான் தாவா சொத்தின் அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று எனக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

4) மொத்த விஸ்தீரணம் 74 சென்டில் 60 சென்ட் போக மீதம் உள்ள 14 சென்டை நான் வேறு யாருக்காவது விற்பனை செய்துள்ளேனா என்றால் சரிதான். தாவா சொத்தின் மீதம் உள்ள 14 சென்டில் 4800 சதுர அடியை நான் வாசுதேவன் என்பவருக்கு விற்வனை செய்துள்ளேனா என்றால் இல்லை நான் வாசுதேவனுக்கு விற்பனை செய்தது உண்மை தான் . ஆனால் அது 4800 சதுர அடி அல்ல. 3 சென்ட் மட்டும் தான் விற்பனை செய்தேன். 2006 ம் ஆண்டு பெருமாள் என்பவருக்கு விற்பனை செய்துள்ளேனா என்றால் சாட்சியிடம் தாவா சொத்தின் வில்லங்கச்சான்றிதழ் கணிணி இறக்கம் செய்தததை காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்பட்டது. அந்த வில்லங்கச்சான்றிதழ் ஆனது **பிவாதசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வில்லங்கசான்றிதழை பார்த்த பிறகு சொத்து பெருமாளுக்கு விற்கப்பட்டதா என்று எனக்கு நினைவில் இல்லை என்று சாட்சி பதில் அளித்தார்.

5) தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இலலை என்றாலும், தாவா சொத்தை எனது பெயருக்கு விளம்புகை செய்யவேண்டி நான் இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கோரவில்லை என்பதாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு 2004 ம் வருடம் செய்தார்கள். தேதி, மாதம் நினைவு இல்லை. எனக்கு தாவா சொத்தில் உரிமை இல்லாமல் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தை பட்டியல் C மற்றும் B ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக எனது வாதுரை மற்றம் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன ஆக்கிரமிப்பிற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆவணங்கள் தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி கையொப்பம் **: Sd/.** நாகலிங்கம்**.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.